258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# சன்லைட் தனது ‘மனுதம் வியமன’ (Manudam Viyamana) மூலமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்துறைகளை மேம்படுத்துவதற்காக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் கைகோர்த்துள்ளது

**22 மார்ச் 2022, கொழும்பு, இலங்கை:** சமூகங்கள் மீதான அக்கறையுடன், பிணைப்புக்களை வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் மேம்படுத்தும் வகையில், யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதான வர்த்தகநாமமான சன்லைட், தனது ‘மனுதம் வியமன’ என்ற செயற்திட்டத்தினூடாக தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்த உதவுவதற்காக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் கூட்டாண்மையொன்றை ஏற்படுத்தியுள்ளது.

ஆடைத் தொழிற்துறை மீது கவனம் செலுத்தும் இந்த நிகழ்ச்சித்திட்டம் 10,000 தொழில்முயற்சியாளர்களை இலக்கு வைத்து வணிக அடிப்படைகள் குறித்த இலவச செயலமர்வுகளை நடத்துவதற்காக சிங்கர் பெஷன் அக்கடமியுடன் கைகோர்க்கும். அவர்கள் தமது நிபுணத்துவ விரிவுரையாளர்கள் அணியின் மூலமாக இலவச ஒன்லைன் செயலமர்வுகளை நடாத்துவர். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதிவை மேற்கொண்டுள்ள பங்கேற்பாளர்களில், 250 பேருக்கு பண உதவி வழங்கப்படவுள்ளதுடன், இதனை அவர்கள் தங்கள் வணிகத்தின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த செயலமர்வில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் இதற்கான பதிவை www.manudamviyamana.lk என்ற இணையத்தளத்தில் உள்நுழைந்து மேற்கொள்ள முடியும்.

இந்த மூலோபாய ஒத்துழைப்பின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில், விளையாட்டு அமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன், யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தலைமை அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹஜார் அலா.்.பி.்.பி லாடெல், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரான சுதீர ஜயரத்ன மற்றும் ஏனைய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

‘மனுதம் வியமன’ நிகழ்ச்சித் திட்டம் குறித்து தனது எண்ணங்களை வெளிப்படுத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் ‘‘சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகின்றன. இந்த வணிகத் துறைகளில் தொழில்முனைவோரை வலுப்படுத்துவதன் மூலம், இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் முடியும். இருப்பினும், தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் நாடு முழுவதும் உள்ள எண்ணற்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை வெகுவாக பாதித்துள்ளது. இலங்கையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் என்ற வகையில், இந்த வணிகங்களுக்கு புத்துயிரளிக்க நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வரும் அதேவேளை, சிறிய மற்றும் நடுத்த தொழில் முயற்சிகளை வலுவூட்டும் நோக்கில் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய யூனிலீவர் ஸ்ரீலங்காவின் ‘மனுதம் வியமன’ செயல் திட்டத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் தொற்றுநோயின் மிகப்பெரிய தாக்கத்தை உணர்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இளைஞர் மற்றும்

விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற ரீதியில், இந்த அற்புதமான முயற்சியை வெற்றியடையச் செய்வதற்கு எங்களின் அதிகபட்ச பங்களிப்பை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம்,'' என்று குறிப்பிட்டார்.

இந்த கூட்டாண்மை குறித்து யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தலைமை அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹஜார் அலா.்.பி.்.பி லாடெல் அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''எமது நாட்டில் பல்வேறு சமூகங்கள் மத்தியில் பிணைப்புக்களை வலுப்படுத்தும் நோக்குடன், 2019 ஒக்டோபரில் 'மனுதம் வியமன' என்ற நோக்கம் சார்ந்த தளமேடையை சன்லைட் ஆரம்பித்து வைத்தது. இலங்கை மக்கள் இரக்க குணம் மிக்கவர்கள் எனப் பெயர் பெற்றுள்ள போதிலும், தற்போது பரவி வருகின்ற தொற்றுநோய் காரணமாக மக்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கப்படுவதால், பலரும் தனிமையில் வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். எவ்வாறாயினும், இலங்கை மக்கள் ஒருவருக்கொருவர் உதவ முன்வருவதற்கு இது எவ்விதத்திலும் முட்டுக்கட்டையாக காணப்படவில்லை. ஒருவருக்கொருவர் அக்கறை செலுத்தும் நமது ஆழமான இலங்கை பிணைப்புகளே அதற்குக் காரணமாகும். சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவுடன் ஏற்படுத்தியுள்ள இந்த கூட்டாண்மை மூலம் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ள எமது சொந்தங்களான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதன் மூலம், எங்கள் சமூகத்திற்குள் 'அக்கறையுடன் பிணைப்புகளை வலுப்படுத்துதல்' என்ற சன்லைட் நோக்கத்தை சிறப்பாக முன்னெடுத்து, எங்கள் பங்கை மீண்டும் ஆற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ரூபா ஐந்து மில்லியன் தொகைக்கும் மேலான முதலீடு என்பது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு மிகவும் தேவைப்படும் உதவிகளை வழங்கி அவற்றை மேம்படுத்துவதில் சரியான திசையில் பயணிப்பதற்கான ஒரு வலுவான அத்திவாரமாகும்,''* என்று குறிப்பிட்டார்.

சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரான சுதீர ஜெயரத்ன அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், *''இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையை ஆதரிக்க சன்லைட் முன்வந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சமூக ஒன்றுகூடலுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் எளிய வாழ்க்கையை வாழ்வதற்குத் தீர்மானித்துள்ளனர். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறை இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும்பாகமாகக் காணப்படுவதுடன், ஒரு மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் அனைத்து வணிகங்கள் மத்தியில் 75% ஆகக் காணப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடைத் தொழிற்துறையில் கணிசமான அளவில் திறன் இடைவெளியை நாங்கள் அவதானித்துள்ளதுடன், எளிதில் கிடைக்கக்கூடிய இந்த இலவச செயலமர்வுகள் இந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு மிகவும் தேவையான அறிவை வழங்கவும், திறன் இடைவெளியைக் குறைக்கவும் மற்றும் தமது வணிகங்களின் தரத்தை மேம்படுத்தவும் உதவும் என்று நம்புகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

135 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட சன்லைட் இலங்கை மக்களின் உள்ளங்களையும், எண்ணங்களையும் வென்றெடுத்துள்ளதுடன், சலவை உற்பத்திப்பிரிவில் சந்தையில் முன்னிலை வகித்து வருகின்றது. கூட்டு நடவடிக்கைகளின் வலு எத்தகையது என்பதற்கு எடுத்துக்காட்டாக நாடெங்கிலுமுள்ள இலங்கை மக்களின் மீண்டு எழும் திறன் மற்றும் இரக்க குணத்தால் ஈர்க்கப்பட்ட இந்த வர்த்தகநாமம், ஒவ்வொரு சன்லைட் விசேட தயாரிப்புப் பொதியிலிருந்தும் ரூபா. 1/= தொகையை 'மனுதம் வியமன' நிதிக்கு பங்களிக்கும். இந்த நிதி மேற்குறிப்பிட்ட முயற்சியை ஆதரிக்கப் பயன்படுத்தப்படுவதுடன், இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடைத் தொழில்துறையை மேம்படுத்துவதற்கும், மனிதகுலத்தின் பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கும், அவர்கள் மீண்டும் தமது சொந்தக்காலில் நிற்பதற்கும் ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பினை ஆற்றவும் இது இடமளிக்கின்றது.